**OS No.79/2022**

PW 1 - ஹபீப்ரஹ்மான்

நாள் 26.03.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

தாவா சொத்து எனக்கும், 1 ம் பிரதிவாதிக்கும், தந்தையும் 2 ம் பிரதிவாதிக்கு தந்தையின் தந்தையாககி ஷேக்இப்ராகிம் என்பவருக்க 13.09.1962 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தின் அசல் **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலே சொல்லப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை ஷேக்இப்ராகிம் ஒப்புக்கொண்டு சொத்தை சுவாதீனம் எடுத்து அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் இதர சொத்திற்கும் ஷேக்இப்ராகிம் பெயரில் அரசால் பட்டா ( பட்டா எண் 246 நில உடைமை குறிப்பேடு ) கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவின் அசல் **பி.வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேலும் இந்த நம்பர் வழக்கில் கண்ட தாவா சொத்துக்களுக்கும் இதர சொத்துக்களுக்கும் ஷேக்இப்ராகிம் பெயரில் அரசாங்கத்தால் நில உடைமை பதிவு மேம்பாட்டு திட்டத்தில் 330 பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவின் அசல் **பி.வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவா சொத்திற்கும், இதர சொத்திற்கும் ஷேக்இப்ராகிம் அரசாங்கத்திற்கு கிஸ்தி செலுத்தி ரசீது பெற்றுள்ளார் மேற்படி கிஸ்தி ரசீதின் அசல் **பி.வா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன் பிறகு தாவா சொத்திற்கும் இதர சொத்திற்கும் எனது தந்தை பெயரில் கணினியில் பட்டா 330 கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டாக்களின் அசல் **பி.வா.சா.ஆ 5, 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பட்டா எண் 330 க்கு 1433, 1434 பசலிகளுக்கு ஷேக்இப்ராகிம் பெயரில் செலுத்தப்பட்ட கிஸ்தி ரசீது அசல் **பி.வா.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவா சொத்துக்களையும், இதர சொத்துக்களையும் ஷேக்இப்ராகிம்

அனுபவம் செய்து இறந்துவிட்டார் அவரின் இறப்புச் சான்றிதழ் **பி.வா.சா.ஆ** 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்தகப்பனார் இறப்பதற்கு முன்னரே என் தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய இறப்புச் சான்று **பி.வா.சா.ஆ** 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2 ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்துவிட்டார். சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 62/2017 ல் என் தகப்பனார் ஷேக்இப்ராகிம் இறந்து போனதற்கு அவருடைய வாரிசுகள் சம்பந்தமாக விளம்புகை வழக்கு நடைபெற்றது சம்பந்தமான விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 62/2017 என்ற எண்ணில் உங்கள் தகப்பனார் ஷேக்இப்ராகிம்வாரிசுகள் சம்பந்தமாக வழக்கு நடைபெற்று பிரதிவாதிகளுக்கு சாதகமான தீர்ப்பாகியுள்ளது என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் தெரிந்து கொண்டே வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.**

**–Sd–**

**Taken down by me in open court**
**readover/interpreted to the witness in Tamil and**
**acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**